**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண். 25/2020**

PW1 – திரு.முருகானந்தம் நாள். 02.09.2024

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திருமதி.B.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது தகப்பனார் ராஜேந்திரன் என்ன வேலை செய்து வந்தார் என்றால் பஞ்சு மில்லில் வேலை செய்து வந்தார். எந்த கால கட்டத்தில் பஞ்சு மில்லில் வேலை செய்தார் என்றால் குறிப்பிட்டு தெரியாது, எனது சிறு வயதிலிருந்து அங்கு வேலை செய்தார். எனக்கு விவசாய சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி விவசாய சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்கள் தொடர்பாக எனது தகப்பனாருக்கும், பிரதிவாதியின் தகப்பனாருக்கும் தனித்தனி பட்டாக்கள் ஏற்பட்டுள்ளதா என்றால் உள்ளது. எனது தகப்பனாருக்கு எந்தெந்த சர்வே எண் கொண்ட சொத்துக்களுக்கு என்ன எண் கொண்ட பட்டா கொடுக்கப்பட்டது என்றால் பட்டா எண்.205 ஆகும், சர்வே எண்கள் பற்றி தெரியாது.

2. பிரதிவாதியின் தகப்பனாருக்கு எந்தெந்த சர்வே எண் கொண்ட சொத்துக்களுக்கு என்ன எண் கொண்ட பட்டா கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. எனது குடும்ப இடத்திற்கு பாத்தியப்பட்ட நத்தம் இடம் எவ்வளவு என்றால் இரண்டு உள்ளது, சர்வே எண் தெரியாது. மேற்படி இரண்டு நத்தம் இடங்களுக்கும் எனது தகப்பனார் மற்றும் பிரதிவாயின் தகப்பனார் பெயரில் தனித்தனியாக பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் ஒரு சொத்திற்கு எனது

தகப்பனார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது, இன்னொரு சொத்திற்கு கூட்டாக உள்ளது. நத்தம் நிலத்திற்கு எனது தகப்பனார் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் தோராயமாக 2.45 செண்ட் ஆகும்.

3. தாவா சொத்தின் அளவு என்னவென்றால் 2.45 செண்ட் ஆகும். எனது தகப்பனாரை விட பிரதிவாதியின் தகப்பனார் மூத்தவர் என்றால் சரிதான். ஒரு நத்தம் இடத்திற்கு முழுவதுமாய் எனது தகப்பனார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து செண்ட்டுக்கு எவ்வளவு மதிப்பு என்றால் சுமாராக 2 லட்சம் இருந்தது, தற்போது என்ன மதிப்பு என்பது தெரியாது. தாவா சொத்தில் உள்ள வீட்டின் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் எவ்வளவு என்றால் தெரியாது. மேற்படி வீடானது 800 சதுர அடியில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டின் மதிப்பு என்னவென்றால் 7 முதல் 8 லட்சம் மதிப்பு இருக்கும். தாவா சொத்திற்கான மின் இணைப்பு மற்றும் வரி ரசீதுகள் பிரதிவாதியின் தகப்பனார் பெயரில்உள்ளது என்றால் மூத்தவர் என்பதால் அவர் பெயரில் உள்ளது.

4. எனக்கு என்ன வயதாகிறது என்றால் 34. 08.04.2013 ல் எனது தகப்பனார் பிரதிவாதியின் தகப்பனாருக்கு தாவா சொத்து தொடர்பாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். பிரதிவாதியின் தகப்பனார் எனது தகப்பனாரை போல் கையொப்பம் செய்து போலியாக ஆவணம் இயற்றியது தொடர்பாக தான் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதியும், அவரது தகப்பனாரும் தான் இருந்து வந்தார்கள் என்றும், நானோ, எனது தகப்பனாரோ இருந்ததில்லை என்றால் சரிதான், நான் எனது ஒரு வயதில் அங்கு இருந்தேன், பின்பு நல்லது, கெட்டதிற்கு அங்கு செல்வோம். என்னுடைய சொந்த வீடு எங்கு உள்ளது என்றால் தேவகோட்டை ரஸ்தாவில் உள்ளது. மேற்படி வீடு எப்போது வாங்கப்பட்டது என்றால் 1992ம் கால கட்டத்தில் வாங்கப்பட்டது. மேற்படி வீட்டிற்கு மின் இணைப்பு மற்றும் வரி

ரசீதுகள் யார் பெயரில் உள்ளது என்றால் எனது தகப்பனார் எனது தாயார் பெயரில் வாங்கியுள்ளார். தேவகோட்டை ரஸ்தாவில் உள்ள வீட்டில் பாதியை பிரதிவாதிக்கு கொடுக்க எனக்கு சம்மதமா என்றால் மேற்படி வீடானது சுய சம்பாத்தியத்தில் வாங்கப்பட்டது, பிரதிவாதிகளுக்கு உரிமை இல்லை.

5. எனது தகப்பனாருக்கு மாத வருமானம் எவ்வளவு அதில் எவ்வளவு செலவு செய்தார் என்றும், எவ்வளவு சேமித்து வைத்தார் என்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் ஒரு நாளைக்கு ரூ.220/– சம்பளம் வாங்குவார், அவரது செலவு, சேமிப்பு பற்றி தெரியாது. கூட்டு குடும்ப வருமானத்தில் இருந்து தான் தேவகோட்டை ரஸ்தாவில் உள்ள வீடு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. கூட்டு குடும்ப சொத்துக்கள் தொடர்பாக பாகப்பிரிவினை செய்து கொள்ள நான் தயாராக உள்ளேனா என்றால் எனது சுய சம்பாத்திய சொத்துக்கள் தவிர கூட்டு குடும்ப சொத்துக்கள் தொடர்பாக பாகப்பிரிவினை செய்து கொள்ள தயார், மேலும் பிரதிவாதியின் தகப்பனார் அவரது மூத்த மனைவிக்கு சொத்துக்கள் கொடுக்க வேண்டும் என்பதற்காக சில சொத்துக்களை முன்பே பிரித்து வாங்கிக் கொண்டார். பாகப்பிரிவினை ஏற்பட்டதற்கு ஆதாரங்கள் உள்ளது என்றால் இல்லை. பிரதவாதியின் தகப்பனாருக்கு இரண்டு மனைவிகள் என்பது தவறு என்றும், நான் சொல்வது போல் பாகப்பிரிவினை எதுவும் நடைபெறவில்லை என்றும், கூட்டு குடும்ப சொத்துக்களை கண்டேத்தமாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, பாகப்பிரிவினை அனைத்து சொத்திற்கும் நடைபெற்று விட்டது. 08.04.2013 மற்றும் 27.06.2020 வழக்கறிஞர் அறிவிப்புக்களில் எனது தகப்பனார் பாகப்பிரிவினை நடைபெற்றதாக அதில் சொல்லப்படவில்லை என்றால் அந்த சமயங்களில் பாகப்பிரிவினை நடைபெறவில்லை அதனால் சொல்லவில்லை.

6. தாவா சொத்தில் அனுபவம் பத்து வருடங்களுக்கு முன்பிலிருந்தே பிரதிவாதியின் தகப்பனாரிடம் உள்ளதாக எனது தகப்பனார் என்னிடம்

சொல்லியுள்ளார் என்றும், அதனடிப்படையில் இவ்வழக்கு காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அண்ணன் தம்பி உறவுமுறையில் தான் தாவா சொத்திற்கு நல்லது, கெட்டததிற்கு சென்று வந்தேன் என்றும், சொந்த உரிமையில் சென்று வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், பிரதவாதியிடமிருந்து தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதால் எனது தகப்பனார் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், அவருக்கு பின்பு நான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிராது படி எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதில்லை என்று சொன்னால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை